வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– திரு. A. கந்தகுமார்., எம்.எல்.,

மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ), மயிலாடுதுறை,

அமர்வு வழக்கு எண் 52/2023

அரசு தரப்பு சாட்சி	2	**நாள்**	06.07.2023
பெயர்	எம். வாசுதேவன்	**ஜாதி**	
தந்தை பெயர்		**தொழில்**	
கிராமம்		**சமயம்**	
தாலுக்கா		**வயது**	

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் கடந்த 31.07.2016 ஆம் ஆண்டு புதுபட்டினம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் ஆய்வாளராக பணி ஓய்வு பெற்றறேன். செம்பனார்கோவில் காவில் நிலையத்தில் பணியாற்றிய போது 13.03.2003 ஆம் தேதி மயிலாடுதுறையில் நடைபெறயிருந்த விடுதலை கட்சி ஊர்வலம் மற்றும் பொது கூட்டம் பாதுகாப்பு பணிக்காக மயிலாடுதுறை காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்து மதியம் 3 மணிக்கு காவேரி மேம்பாலம் அருகில் காவல் ஆய்வாளர் திரு. அமிர்குமார் மற்றும் திரு. மேகனவேல் அவர்களுடன் முன்பகுதி பாதுகாப்பு பணியில் என்னுடன் 1023, 1309, 398 மற்றும் ஆயுதபடை போலீசார் இவர்களுடன் பாதுகாப்பு பணியில் இருந்தோம். விடுதலை கட்சியினுடைய ஊர்வலம் தலைவர் திரு.தொல்.திருமாவளவன் மற்றும் ராஜு என்கிற ஈழவலவன் தலைமையில் 4000-திற்கு மேற்பட்டோர்கள் பெரும் திரலான கூட்டம் இருந்தது. அதில் முன்பக்க பகுதியில் காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலருடன் பாதுகாப்பு பணியில் செய்த போது ஊர்வலம் செம்மங்கலம் அருகில் வந்த போது ஊர்வலத்தினர் அனுமதி வழங்கப்பட்ட சாலை 1ஐ விடுத்து நம்பர் 2ம் சாலை வழியாக ஊர்வலத்தை வழிநத்தும் போது காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் ஊர்வலத்தை தடுத்தோம். பெறும் திரலான கூட்டத்தினர் போலீஸ் ஒழிக, ஜெயலலிதா போலீஸ் ஒழிக என்று கோசம் போட்டனர். அதனை தொடர்ந்து தலைவர் தொல்.திருமாவளன் வந்து போங்கடா என்று சொன்னதும் கூட்டதினர் 2ம் நம்பர் சாலை வழியாக போக எத்தரித்த போது தடுத்த எங்களை கற்களாலும், கட்டையாலும் எங்களை தாக்கினார்கள். அதில் எனக்கு இடது பக்க தலையில் இரத்த காயமும், வலது காலில் வலியும் ஏற்பட்டது என்னையும் காயம்பட்ட ஆய்வாளர் மற்றும் காவலர்கள் அனைவரும் மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்படடோம். நான் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மனையில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் நடந்த விபரத்தை நான் சொன்னேன்.

1 முதல் 13 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரத்தை தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் தொல்.திருமாவளவன் தள்ளி போங்கடா என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கிற்காக இந்த விபரத்தை பொய்யாக முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் எனக்கு பணி ஒதுக்கப்பட்டதற்காக நாட்குறிப்பில் பதிவு உள்ளதா என்றால் உள்ளது. ஆய்வாளர் விசாரணையின் போது மேற் சொன்ன குறிப்புகளை வாங்கி பார்த்தார்களா என்றால் நான் மருத்துவ மனையில் இருந்த காரணத்தினால் அதை காண்பிக்கவில்லை. 13.03.2003 அன்று ஊர்வலம் நடைபெற்ற போது பொது கூட்ட பாதுகாப்பு பணிக்காக மதியம் 3 மணிக்கு காவேரி மேம்பாலம் அருகிலோ, 1 அல்லது 2 சாலை அருகிலோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், ஆவாளர் மற்றும் காவலர்களும் ஊர்வலத்தை தடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தடுத்த போது கற்கல் மற்றும் கட்டையால் தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவ மனையில் அனுமதிக்கும் போது வலது பக்க தலையில் காயம் ஏற்பட்டதாக தான் மருத்துவரிடம் கூறினேன். மேற்கண்ட ஊர்வலத்தினால் நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் தாக்கப்படவில்லை என்றும், அதன் காரணமாக தான் முதல் விசாரணையில் ஒன்றும் குறுக்கு விசாரணையில் ஒன்றும் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எனது காவல் உயர் அதிகாரிகள் இட்ட உத்தரவின் பேரில் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விடுதலை சிறுத்தை கட்சி கண்ட கூட்டம் தமிழ்நாடு எங்கும் நடத்த கூடாது என்பதற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கு இனங்க முதல் விசாரணையில் பொய்யாக சங்கதிகளை கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் நான் இல்லை என்றும், அதனால் தான் முதல் விசாரணையில் ஒன்றும், குறுக்கு விசாரணையில் ஒன்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.